**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**Probate.O.P.No.86/2020**

13.03.2026 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.தீ.சுகந்தமாலா, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிர்மனுதாரர் சாட்சி 1 செந்தாமரை க/பெ.துரைசாமி:

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

எதிருரையில் கூறியுள்ள விபரங்கள் நான் சொன்னதன் அடிப்படையில் என் வழக்கறிஞர் தயார் செய்து தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம். என் தந்தை மாணிக்கத்தின் கையொப்பம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் 21.05.2003 தேதியிட்ட கிரைய பத்திரத்திரம் உண்மை நகலில் (ம.சா.ஆ.5) உள்ள கையொப்பம் என் தந்தையின் கையொப்பமா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் 16.02.2004 தேதியிட்ட உயில் சாசனத்தில் (ம.சா.ஆ.15) உள்ள கையொப்பம் என் தந்தையின் கையொப்பமா என்றால் அது என் தந்தையின் கையொப்பம் இல்லை. என்னிடம் காட்டப்படும் 21.05.2003 தேதியிட்ட கிரைய பத்திரத்திரம் உண்மை நகலில் (ம.சா.ஆ.6) உள்ள கையொப்பம் என் தந்தையின் கையொப்பமா என்றால் ஆமாம்.

மனுசொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்று கூறுவதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அது என்னிடம் காட்டப்படும் எமசாஆ.1 கிரயபத்திரமா என்றால் அந்த சொத்தினை விற்று தான் சொத்து வாங்கப்பட்டது. எ.ம.சாஆ.1 கிரயபத்திரத்தில் அது மூதாதையர் சொத்து என்று கூறப்பட்டுள்ளதா என்றால் சேகர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மூதாதையர் பெயரில் உள்ள பட்டா அல்லது அ பதிவேடு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அது எந்த ஆவணம் என்றால் என்னிடம் காட்டப்படும் எம.சாஆ.1 பத்திரம் ஆகும். மனு சொத்துக்கள்

அனைத்தும் மாணிக்கத்தின் சுயசம்பாத்திய சொத்துக்கள் என்றும் ஆனால் நான் அது மூதாதையர் சொத்து என்று பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

வயதான காலத்தில் மாணிக்கம் அவர்களை உணவு, உடை, இருப்பிடம் கொடுத்து கவனித்துக்கொண்டது யார் என்றால் நானும் கவனித்துக்கொண்டேன், மனுதாரர் அரிராமின் தாயார் மல்லிகாவும் கவனித்துக்கொண்டார். நான் திருமணம் ஆகி கணவர் துரைசாமியுடன் செய்யானந்தல் கிராமத்தில் வசித்துவருகிறேன் என்றால் ஆமாம். மனுதாரர் ஊருக்கும் நான் குடியிருக்கும் ஊருக்கும் இடையில் தூரம் சுமார் 12 கிமீ இருக்கும் என்றால் சரிதான். என் தந்தை மாணிக்கம் என்ன நோய் வந்து காலமானார் என்றால் நுரையீரலில் சளி கோர்த்துக்கொண்டதால் அவர் புதுவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 4 நாட்கள் சிகிச்சைக்குப்பிறகு காலமாகிவிட்டார். நான் சொல்வது பொய் என்றும் உண்மையில் மாணிக்கத்திற்கு யானைகால் வியாதி, சர்க்கரை நோய் மற்றும் நரம்புதளர்ச்சி இருந்தது என்றும் அதன் காரணமாகத்தான் அவர் இறந்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. உண்மையில் கடைசிகாலத்தில் நான் மாணிக்கத்தில் அருகில் இருந்து அவரை கவனித்திருந்தால் அவருக்கு என்ன நோய் என்பது எனக்கு தெரிந்திருக்கும் என்றும் நான் அவரை கவனிக்காத காரணத்தால் தான் அவருக்கு என்ன நோய் என்பது எனக்கு தெரியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மாணிக்கத்திற்கு இறக்கும் தருவாயில் அதிக கடன்கள் இருந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மாணிக்கம் இறந்த பிறகு அந்த கடனை திருப்பி செலுத்தியது யார் என்றால் நானும் மல்லிகாவும் திருப்பி செலுத்தினோம். மாணிக்கத்திற்கு எவ்வளவு கடன் இருந்தது என்று தெரியுமா என்றால் சுமார் ரூ.40,000/- கடன் இருந்தது. நானும் மல்லிகாவும் சேர்ந்து எவ்வளவு தொகை திருப்பி செலுத்தினோம் என்றால் நான் ரூ.50,000/- கொண்டுவந்தேன், மல்லிகா எவ்வளவு ரூபாய் கொண்டுவந்தார் என்று ஞாபகம் இல்லை. கடன் தொகையை

யாரிடம் திருப்பி செலுத்தினோம் என்றால் சின்னதம்பி என்பவரிடம் திருப்பி செலுத்தினோம். சின்னதம்பியின் கடனை எந்த தேதியில் பைசல் செய்தோம் என்றால் அது ஞாபகம் இல்லை. சின்னதம்பியிடம் மாணிக்கம் கடன் வாங்கியிருந்தது உண்மை என்றும் ஆனால் சின்னதம்பி காலமாகிவிட்டதால் மல்லிகா தான் மாணிக்கம் செலுத்தவேண்டிய கடனை சின்னதம்பியின் மகன் ஏழுமலைக்கு செலுத்தி கடனை பைசல் செய்தார் என்றும் நானும் மல்லிகாவும் சேர்ந்து சின்னதம்பியிடம் தொகை செலுத்தி கடனை பைசல் செய்ததாக நான் சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல.

மாணிக்கம் சின்னதம்பியிடம் வாங்கியருந்த கடனை தவிர்த்து இன்னும் சில நர்பகளிடமும் கடன் வாங்கியிருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. என் தாயார் வெள்ளச்சியம்மாள் எந்த வருடம் இறந்தார் என்றால் வருடம் எனக்கு தெரியாது. என் தாயார் இறந்தபிறகு எனக்கு திருமணம் ஆனதா என்றால் இல்லை, என் தாயார் இறப்பதற்கு முன்பே எனக்கு திருமணம் ஆகிவிட்டது. மாணிக்கத்திற்கும் மல்லிகாவிற்கும் திருமணம் ஆவதற்கு முன்பே 2 குடும்பத்திற்கும் அறிமுகம் இருந்ததா என்றால் இருந்தது. என் தாயார் இறந்த பிறகு எத்தனை மாதங்களுக்கு பிறகு மாணிக்கத்திற்கும் மல்லிகாவிற்கும் திருமணம் நடந்தது என்றால் சுமார் 5 அல்லது 6 மாதங்களுக்குள் திருமணம் நடந்தது.

கணபதிபுரம் காட்டுமாரியம்மன் கோவில் அருகில் வசிக்கும் ஏழுமலை என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அவர் என் சித்தப்பா ஆவார். மாணிக்கத்திற்கு மல்லிகாவை பெண்கேட்டு நானும் என் சித்தப்பாவும் தான் மல்லிகா வீட்டிற்கு சென்றோம் என்றால் ஆமாம். அதற்கு முன்பு மல்லிகாவின் குடும்பத்தை பற்றி எனக்கும் என் சித்தப்பாவிற்கும் தெரியாது என்றால் சரிதான். நான் தான் 2வது திருமணம் செய்துகொள்ளும்படி மாணிக்கத்தை கேட்டுக்கொண்டேன் என்றால் சரியல்ல, சமைத்துப்போட ஆள் இல்லை என்பதால்

பங்காளிகள் மாணிக்கத்தை 2வது திருமணம் செய்துகொள்ளும்படி கூறினார்கள். 2வது திருமணத்திற்கு மல்லிகாவின் பெற்றோர் சம்மதம் தெரிவிக்கவில்லை என்றும் அவர்களை எப்படி சமாதானம் செய்து 2வது திருமணத்திற்கு நாங்கள் சம்மதிக்கவைத்தோம் என்றும் கேட்டால் அது எனக்கு ஞாபகம் இல்லை. நாங்களாக சென்று மல்லிகாவை 2வது திருமணத்திற்கு பெண்கேட்டு மாணிக்கத்திற்கு திருமணம் செய்துவைத்துவிட்டு தற்போது மாணிக்கத்தின் சொத்துக்களை அபகரிப்பதற்காக பொய்யான காரணங்களை தெரிவித்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொதுவாக குடும்பம் சம்மந்தமான பிரச்சனைகளில் மாணிக்கம் அவராக முடிவு செய்வார் என்றும் யாரிடமும் கேட்கமாட்டார் என்றும் சொன்னால் சரிதான். அதுபோல மாணிக்கம் உயில் எழுதுவதற்கும் அவரே யாரிடமும் கேட்காமல் முடிவு செய்திருப்பார் என்றால் அவர் முடிவு செய்திருக்கமாட்டார், அவர் உயில் எழுதி வைக்கவில்லை. வழக்கு சொத்திற்காக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் என் சாட்சியம் நிலைக்கதக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. என்னை கொலைசெய்துவிடுவதாக மனுதாரரும் அவர் உறவினர்களும் மிரட்டினார்கள் என்று நான் கூறியுள்ளேன் என்றும் இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றும் கேட்டால் புகார் கொடுக்கவில்லை. உண்மையில் அவர்கள் என்னை மிரட்டியிருந்தால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றும் அவர்கள் மிரட்டினார்கள் என்று நான் சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல.

மனு சொத்துக்கள் மாணிக்கத்தின் சுயசம்பாத்திய சொத்துக்கள் என்றும் அது பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல, பூர்வீக சொத்து உள்ளது, நாங்கள் சம்பாதித்த சொத்தும் உள்ளது. என் தாயார் 1990ம் ஆண்டு தூக்குமாட்டி இறந்துவிட்டார் என்று பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா

என்றால் இல்லை. என் தாயார் இறந்த பிறகு 3 வருடங்கள் கழித்து 1993ல் தான் மாணிக்கத்திற்கும் மல்லிகாவிற்கும் திருமணம் நடந்தது என்றால் சரியல்ல, திருணம் என் தாயார் இறந்த உடனேயே நடந்துவிட்டது.

மாணிக்கத்திற்கும் மல்லிகாவிற்கும் திருமணம் நடப்பதற்கு முன்பு இரண்டு குடும்பத்திற்கும் அறிமுகம் இல்லை என்ற சூழ்நிலையில் பிரமாண வாக்குமூலத்தில் நான், மல்லிகாவின் தந்தை அவரது 5 மகள்களை வசதியற்ற நிலையில் திருமணம் செய்துகொடுக்க முடியாமல் 54 வயதுள்ள மாணிக்கத்துடன் 22 வயதுள்ள மல்லிகாவை கள்ளஉறவில் வயது வித்தியாசம் பார்க்கமல் பணத்திற்காகவும், சொத்திற்காகவும் அவரை மயக்கி கள்ளஉறவில் இருந்ததாக, கூறியுள்ளது பொய் என்றும் மனுதாரரின் தாயார் மீது பழிசுமத்தும் நோக்கில் இவ்வாறு பொய் கூறியுள்ளேன் என்றும் சொன்னால் நான் கூறியுள்ளது உண்மை தான். என் தந்தைக்கும் மல்லிகாவிற்கும் எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்றால் எந்த ஆண்டு என்று எனக்கு தெரியவில்லை.

பொதுவாக, சுயமாக என்றால் அதன் பொருள் சொந்தமாக தயாரித்தது என்றால் ஆமாம். நான் பிரமாண வாக்குமூலம் பத்தி 15ல் Expert Openion 31.07.2023ல் மனு செய்து 01.08.2023ல் அறிக்கை பெற்றுள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஒரே நாளில் அறிக்கை பெற்றுள்ளதாக நான் கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. மனுதாரரின் சித்தப்பா மற்றும் சித்தி கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்று நான் கூறுவதற்கு அவர்கள் மீது புகார் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை.

மாணிக்கம் இறக்கும்போது அவருக்கு ரூ.6,95,000/- கடன் இருந்தது என்றால் அவருக்கு கடன் இல்லை. என் தாயார் 1990ல் தூக்குமாட்டி இறந்ததாக கூறியுள்ளது சந்தேக மரணம் என்று நான் கூறியுள்ளதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மாணிக்கம் மனுதாரர் பெயருக்கு ம.சாஆ.15 உயில் எழுதிவைத்துள்ளார் என்றும் ஆனால் சொத்துக்காக நான் மாணிக்கம்

உயில் எழுதிவைக்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மாணிக்கம் மனுதாரர் பெயருக்கு உயில் எழுதி வைத்த விபரம் எனக்கு நன்கு தெரிந்திருந்தும் நான் முன்னுக்கு பின் முரணாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ARUMUGAM MANIMOZHI
PW2/20072024/OP332024
Digitally signed by ARUMUGAM MANIMOZHI
Date: 2026.03.13 18:26:25 +0530

Principal Sessions Judge,
Villupuram.